<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 7/2022 நாள்: 21.01.2026 ம.சா.2 – ரஞ்சித்குமார்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

இந்த மனுவிசாரணையில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. மனுதாரருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து சம்பந்தமாக நான் காவல் துறையினரிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து சம்பந்தமாக காவல் துறையினர் என்னிடம் விசாரணை எதுவும் செய்யவில்லை. காவல் துறையினர் தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கை நான் பட்டியல் சாட்சி இல்லை என்றால் சரிதான். நான் உண்மையில் விபத்தை நேரில் பார்த்திருந்தால் காவல் துறையினர் என்னையும் ஒரு சாட்சியாக விசாரணை செய்து சாட்சி பட்டியலில் குறிப்பிட்டிருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து உடுமலைபேட்டை – தளி மேம்பாலத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கீழே பாலம் இறங்கி சாலை சந்திக்கும் இடத்தில் விபத்து நடந்தது. இறந்துபோன நபர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாலையை இரு சக்கர வாகனத்தில் கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். பொதுவாக முனிசிபால்டி ரோட்டிலிருந்து தென்வடல் சாலையை கடக்கும் போது மேம்பாலத்திலிருந்து வாகனங்கள் வருகிறதா என்று பார்த்து தான் சாலையை கடக்க வேண்டும் என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாரர் மேம்பாலத்திலிருந்து தனது வாகனத்தை தென்வடலாக சாலை விதிகளை கடைபிடித்து ஓட்டிவந்தார் என்றும், இறந்துபோன நபர் தான் வாகனத்தை கவனிக்காமல் திடிரென சாலையின் குறுக்காக கடந்ததால் தான் விபத்து என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் தகுந்த தலைக்கவசம் அணியாமல்

சாலையை குறுக்காக கடந்ததால் தான் விபத்து என்றால் சரியல்ல. விபத்து இறந்தநபரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை, மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -**

விபத்து 1வது எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிராதையால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக தண்டபாணி என்பவர் உடுமலைபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கை 1வது எதிர்மனுதாரர் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.01.21 17:10:11 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.